செ.வெ.எண்.49 நாள் .17.09.2022

கரூர் மாவட்டம்

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
## மாவட்ட இயக்க மேலாண்மை அலகு – கரூர்

## பத்திரிக்கை செய்தி

### கரூர் மாவட்டத்தில் காலியாகவுள்ள 6 வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்படுகிறது

கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கரூர், கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி, கடவூர் மற்றும் தோகைமலை வட்டாரங்களில் காலியாகவுள்ள ஒப்பந்த அடிப்படையிலான 6 வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடத்திற்கு எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட அளவிலான தேர்வுக்குழு மூலம் தகுதியான நபர்கள் தேர்வு செய்து நியமனம் செய்யப்பட உள்ளது. பின்வரும் தகுதியுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் – நியமனத்திற்கான தகுதிகள்**

எதேனும் ஒரு பட்டப் படிப்பில் தேர்ச்சி மற்றும் 6 மாதம் கணினி சான்றிதழ் படிப்பு முடித்து இருக்க வேண்டும், 28 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் (31.08.2022 ம் தேதிய நிலையில்), குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் இது போன்ற திட்டங்களில் பணிபுரிந்த அனுபவம் இருத்தல் வேண்டும், சம்மந்தப்பட்ட வட்டாரத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். தேர்வு செய்யப்படும் பட்சத்தில் மற்ற வட்டாரங்களில் பணிபுரிய தயாராக இருக்க வேண்டும், தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

தகுதியுடைய நபர்கள் எழுத்து தேர்வு மற்றும் நேர்முக தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு தொடர்புடைய வட்டார அளவிலான கூட்டமைப்பின் வழியான ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய அனுமதிக்கப்படுவார்கள்.இதில் வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கு மாத மதிப்பூதியமாக ரூ.12,000/–ம் வழங்கப்படும். மேற்காணும் தகுதி உள்ளவர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தை கீழ்க்கண்ட முகவரி அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து **திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மாவட்ட ஆட்சியரகம் கரூர். அலுவலகத்திற்கு 26.09.2022 ஆம் தேதி மாலை 5.45 மணிக்**குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிட தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.